**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 19/2024**

**Prosecution Witness 4 (LW 9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஆறுமுகம் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | நவுனான் | தொழில் | : | துணை இயக்குநர், சென்னை (மருந்து கட்டுப்பாட்டு துறை)ஓய்வு |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2025.

( 1,2,3 எதிரிகள் ஆஜர் இல்லை, BNSS Act மனு அனுமதிக்கப்பட்டது, மற்ற எதிரிகள் ஆஜர் )

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஓட்டுநர் உரிமம் மூலம் ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை

நான் தற்சமயம் மாநில மருந்து கட்டுப்பாட்டு துறையில் துணை இயக்குநராக இருந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் மதுரை மண்டலத்தில் மருந்து கட்டுப்பாட்டு துறையில் உதவி இயக்குநராக 2014 ஆம் ஆண்டு பணியாற்றினேன். அப்போது தேனி சரக மருந்துகள் ஆய்வாளர் மதுரையில் உள்ள உறங்கான்பட்டியில் இயங்கி வந்த டெக்னோமெட் என்ற மருந்து நிறுவனத்தின் சில ஆவணங்களின் நகல்கள் ஆய்வுக்காக கேட்டு எனக்கு கடிதம் கொடுத்தார்.

அதன் அடிப்படையில் அந்த மருந்து தயாரிப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் 25 மற்றும் 28 நகல் -2 (எண்ணிக்கை) , அந்த

நிறுவனத்தின் உரிமையாளர் ரகுநாதன் என்பவரின் குடும்ப அட்டை நகல் –3, அந்த உரிமத்தை ரத்து செய்ய அந்த நிறுவனத்தின் உரிமையாளர் கொடுத்த விண்ணத்தின் நகல்–4. சென்னை மருந்து கட்டுபாடு இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தின் நகல் –5 ஆகியவற்றை தேனி சரக மண்டலத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எ.த.கு.வி – இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.**

மறு விசாரணை இல்லை

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.04.10 14:18:36 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 07.04.2025 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
07.04.2025.